**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.66/2017**

2025–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 19.06.2025 | கணவர் பெயர்: | ஜெயராமன் |
| பெயர்: | அமிர்தம்<br>(PW-2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| தொழில்: | உதவியாளர்(TNSTC) | வயது : | 59/2025 |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :19.06.2025</u>**

1. இந்த வழக்கை எனது கணவர் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தார் என்றால் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது மற்றும் தாவா சொத்தில் இருந்து விலகி கொள்ளவேண்டும் என்பதற்காக வழகது தாக்கல் செய்தார். தாவா சொத்து இருக்கும் இடம் திருநகரி. எனக்கு சொந்த ஊர் திருவாரூர். எந்த வருடம் எனக்கு ஜெயராமனுடன் திருமணம் நடைபெற்றது என்றால் 2000–ம் வருடம் ஆகும். தாவா சொத்து இருக்கும் இடம் நான் குடியிருக்கும் இடத்தில் இருந்து சுமார் 15 கி. மீ தொலைவில் உள்ளது. நான் திருமணம் நடைபெற்றது முதல் சீர்காழியில் தான் வசித்து வருகிறேன். எனது மாமியார் பெயர் புஷ்பவள்ளி. எனது மாமனார் பெயர் வெங்கடேசன். வெங்கடேசனின் முதல் மனைவி பெயர் காந்தி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெங்கடேசனுக்கும் காந்திக்கும் பிறந்த மகள்கள் சந்திரா மற்றும் சாந்தி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. சந்திரா மற்றும் சாந்தி எங்கு உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காந்தி இறந்த பிறகு தான் எனது மாமியாரை வெங்கடேசன் திருமணம் செய்தாரா என்றால் அது பற்றி யாரும் எனக்கு சொல்லவில்லை.

வெங்கடேசனுக்கும் அவரது 2–வது மனைவி புஷ்பவள்ளிக்கும் பிறந்த மகன்தான் எனது கணவர் வாதி ஜெயராமன் என்றால் சரிதான். ஜெயராமணின் உடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரர் மற்றும் ஒரு சகோதரி ஆவார். ஜெயராமணின் சகோதரர் ராஜேந்திரன் இறந்துவிட்டார் அவர்களுக்கு வாரிசுகள் உள்ளனர். தாவா சொத்தின் புல எண்.961. தாவா எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 3 அயிட்ட சொத்துக்கள் இருக்கும். நான் தாவாசொத்தினை பார்த்துள்ளேனா நான்கெல்லை தெரியுமா என்றால் முன்பு ஒரு முறை எனது கணவர் தாவா சொத்திற்கு அ ழைத்து சென்றார் அதன் விபரம் எனக்கு தெரியும்.

3. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் எல்லாம் சேர்த்து சுமார் 4.1/2 ஏ. இருக்கும் என்று சொன்னார்கள். ஒவ்வொரு சொத்திற்கும் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் எனக்கு தெரிந்து எந்த சர்வே எண் என்று தெரியாது ஆனால் நான்கெல்லை தெரியும் கிழக்கு பக்கத்தில் கோவிந்தராஜ் நிலம், மேற்கு பெருமாள் தேவரின் நிலம், வடக்கில் ராமலிங்கம், சுப்பரமணியன், காளிதாஸ் ஆகியோர்கள் நிலம் உள்ளது. தெற்கில் நடைபாதை உள்ளது என்று சொன்னார்கள். தாவா நிலத்திற்கு வாய்க்கால் தண்ணீர் மற்றும் வடிகால்நீர் எவ்வாறு வரும் போகும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது கணவருக்கு தெரியும். எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எனது மாமனார் வெங்கடேசனுக்கு நில உச்ச வரம்பு சட்டத்தின்படி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாக பாத்திய விடுதலை பத்திரம் அசல் எனது வசம் உள்ளது அதன் சான்றிட்ட நகல்தான் இந்த ஆவணம்.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வெங்கடேசனின் முதல் தாரத்தின் வாரிசுகள் கையெழுத்து செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணமானது பதிவு செய்த காலத்தில் முதல் தாரத்தின் வாரிசுகளை மறைத்து வாரிசு சான்று தாக்கல் செய்யாமல் பதிவு செய்யப்பட்டது என்ற காரணத்தால் இந்த ஆவணம் செல்லத்தக்கது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 17.08.1977–ல் வருடம் வெங்கடேசன் கல்யாணி என்பவருக்கு கிரய அக்ரிமெண்ட்ட எழுதிக்கொடுத்தார் என்றால் அது போர்ஜரியாக தாயாரிக்கப்பட்டதாக இருக்கும். மேற்படி ஆவணத்தை மறுத்து கட்சி செய்யப்பட்டுள்ளதா என்றால் எனது கணவர் சொல்லியிருக்கிறார். கடந்த 17.08.1977–ல் தாவா சொததின் வசத்தை வெங்கடேசன் கல்யாணிடம் ஒப்படைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 22.01.1993–ம் தேதியிட் சீலிங்தொகை தொகையை செலுத்தியதற்கான ரசீது வெங்கடேசனுக்காக கல்யானியின் மகன் அன்புமணி செலுத்தியது என்றால் அது போர்ஜரியாக இருக்கும்.

5. தாவாசொத்தின் கிரய தொகையாக வெங்கடேசன் கல்யாணியிடம் 17.08.1977 அன்று ரூ.7750/– பெற்றுக்கொண்டுவிட்டார் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி சரோஜாவின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. தாவா சொத்தை 1–ம் பிரதிவாதியின் கணவர் சுப்பரமணியன் அவர்களுக்கு கல்யாணியம்மாள் 1994–ல் வசம் விட்டு சீலிங்தொகையும் சுப்பரமணியன் அவர்களால் 11.04.1995–ல் செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. கடந்த 30.10.1999–ல் 1–ம் பிரதிவாதி கணவர் சுப்பரமணியன் அவருக்கு கல்யாணியம்மாள் மற்றும் அவரது மகன்கள் அன்புமனி, வெள்ளையதேவன் ஆகிய மூவரும் சேர்ந்து வர்த்தமான பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

6. சுப்பரமணியின் தம்பிதான் 2–ம் பிரதிவாதி என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தாவா சொத்துக்கள் பொருத்து கடந்த 25.02.1999, 02.02.2000, 26.02.2001, 10.03.2007 ஆகிய தேதிகளில் 2–ம் பிரதிவாதி சீலிங் தொகையை செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் சரோஜாவும் தாவா சொத்துக்களை பொருத்து சீலிங் தொகை செலுத்தியுள்ளார் என்றால் அது போர்ஜரியாக இருக்கும். 1–ம் பிரதிவாதியின் கணவர் சுப்பரமணியன் திருச்சிராப்பள்ளியில் வேலை பார்த்துவருவதால் தாவா சொத்தை பொருத்து 2–ம் பிரதிவாதி சாகுபடி செய்து வருகிறார் என்றால்

சரியல்ல. எது கணவர் ஜெயராமண் நகராட்சியில் வேலை செய்ததால் பல ஊர்களில் வேலை பார்த்துள்ளார் என்றால் சரிதான். வெளியூரில் வேலை பார்த்த காரணத்தினால் அங்கியே தங்கிவிடுவார் என்றால் சரியல்ல. வீட்டுற்கு வந்துதான் போவர். தாவா சொத்துக்களை நானோ எனது கணவரோ எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.